உ
சிவமயம்

தேவகோட்டை சிறப்புமலர்





தேவகோட்டையின் காவல் தெய்வம்

ஸ்ரீ கோட்டை அம்மன்

உ
சிவமயம்

தேவகோட்டை சிறப்புமலர்



ஆக்கம்

திரு. ரகு காசி விஸ்வநாதன்

கண்டனூர்.

மறுபதிப்பு : அக்டோபர்-2024

உ
சிவமயம்

தேவகோட்டை சிறப்புகள் மலர்

ஊக்கம்
திரு. மா.அரு. சோமசுந்தரம்
தேவக்கோட்டை

ஆக்கம்
திரு. ரகு காசி விஸ்வநாதன்
கண்டனூர்.

பக்கங்கள் – 32 பக்கங்கள்

வெளியீடு : அக்டோபர் 2024

வெளியிடுவோர்
தேவி மெய்யப்பன்

கற்பக விநாயகர் சரணம்

கற்பகக் களிறே, கருணையின் அருளே
சொற்பதம் கடந்த சுகந்தரு பொருளே
அற்புதம் ஆற்றிடும் அறிவுடைத் திருவே
தற்பதத் தருவே, தகுதியின் உயர்வே
நிர்மலத் திகழ்வே நிகழ்வுறு நலமே
உற்பவத் தெளிவே உணர்வின் உயர்வே
முற்படு தீவினை முழுதுமகற்றிடு தயவுற
பிற்படு பிறவிகளின்றித் தீர்த்திடு நயமுற !
கற்றிடும் இளையவர் கருத்தினில் உறைவே
பொற்பதம் பிடித்தேன் புண்ணியந்தருக !...



விற்படு அம்பாய் விரைகிற வாழ்வில்
நிற்பதற்க்கோர் நல்நெறிமுறை ஈக !
குற்றங்கள் தவிர குணநலனருள்க !
செற்றங்கள் ஒழிய நிறைநிலை அருள்க
மற்றவர் மதிக்கும் மதிநலமருள்வாய்!
பெற்றவர் உவக்க பெருநிலை தருக !
உற்றவர்க்கு உதவிட உயர்நிதி தருக !
சுற்றங்கள் நீடும்நிதி கொடுத்து உதவ
பெற்றியைத் தருவாய் பிள்ளை யாரப்பா !
முற்றுந் தொழுதேன் முதல்வ நின் சரணம்...

கைத்தலம் நிறைகனி மெய்த்தவ நாயக!
பொய்யுரை வார்த்தைகள் போக்கிடு தூயவ !
மெய்த்திகழ் மேனிநலமுற வைத்திடு ஐயா!
நைத்திடும் துன்பம், நலித்திடு நோய்களகல
வைத்திடு தலைமக! வையக வாழ்வினில்
துய்த்தவை அனைத்தும் துகளறச்செய்பவ!
தைத்திடு எமது உயிரை தகுபடு நிலையில்
உய்த்திடு எனை உனதிரு தாள்களில் !
மைத்திரள் கண்ணிமதுரை மீனாள் மகவே
அரன்மகிழ் மதலையே ஐங்கர நாதா சரணம்...

பங்குனி உத்திரத் திருநாள்

மன்றிலாடும் கொன்றைச் சடையர்
ஒன்றிப் பரவ உபதேசஉரையாக
அன்றைக்களித்த இளையோனே
குன்றக்குடியிற் அமர்வோனே
தென்றற் பரவும் மயில்மலையிற்
என்றும் எமக்கருள் குகநாதா
அன்றிலில் அமரும் அழகோனே
நன்றி நவிலுரையுறு தனிவேலே....1



வித்தகம் பேசி வினைசெய்வோரை
பத்தியஞ் சரி செய்வாய் பாலகனே
மெத்தப் பழிசெய் சிறுமதிவேதையரை
சத்தியமாக வதை செய்வித்தருள் நீயே
முத்தமிழாய்ந்த முதற் சங்கந் தந்த
நித்தியப் பொருளே தனி நாயகமே
உத்தமத் தமிழில் உமைக்கண்டோம்
பத்தினிக் குறத்தி பரவும் பதியோனே..........2

சிந்தனை கலங்கித் திரிவோர்க்கும்
சிந்தையிலுணராப் புரியார்க்கும்
அத்தமஞ் சொல்லும் மதியர்க்கும்
குந்தகம் விளைபயிர் செய்வோர்க்கும்
அந்தகக் கண்ணராய் அமைவோர்கும்
மந்திரமேவிச் சதிகள் செய்வோர்க்கும்

அவரவர் புந்தியைச் சரிசெய் கதிர்வேலா
இந்திரன் மகளை மணந்தோனே
வந்தனைசெய்து வார்த்தையிலுரைத்து
நுந்தனைப்பாடி யாம் மகிழ்வோமே.......3

உ

சிவமயம்

தேவகோட்டை சிறப்புகள்

தேவிகோட்டை நகரின் நலங்கள் இயம்ப
நயந்து யாம் விழைந்தோம் எமது மனதளவில்
பாவில் இயலும் எம்பைந்தமிழை பரிமளிக்கச்செய்
பார்வதிதேவியின் முதல் மகன் விநாயகனே! எம்
நாவில் நான்முகன் மனையாள் கலைமகளை
வந்திருந்து நடனமிடச் செய்க நல்லவனே!
ஓவியமாய் அவையமைய உற்ற துணை உனையே
யாம் மனதில் ஏகோபித்தே அஞ்சலித்தோம்.!

மங்கல மாதர் பண்ணிசையில்,
மழலையர் மிழற்றும் நயவுரையில்,
கொங்கலர் குயில்தரு தேனிசையில்,
கோவைச் செவ்வாய்க் கிளிமொழியில்,
சங்கத்தமிழன் பூங்குன்றன் பாவடிவில்
நற்றவர் நவிலும் பொற்தகவில்,
பாதம் பதிக்கும் கலைமகளே!
பரிந்தே வருவாய் யாம் பாட....

ஊர்ப்பெயர் காரணம்

மானைத்தேடித் தம் மனைவி மைதிலியை,
இராவணன் கவர்ந்ததை அறியாமல்,
கானகம் யாவினும் தம் இளவலொடு
ஓடித்துடித்துக் களைத்து ஓய்கையிலே
வான் வழி வந்த அனுமனவன்
"**தேவியைக் கண்டேன்**" என்னும் நல்மொழி,
தேனாய் உரைத்த பதியதுவே "**தேவிகோட்டை**"
எனச் செப்புவர் சிறந்தோர்கள்...

அம்பிகை என்னும் மலைமகளாள்,
ஈசனவனின் இடப்பாகத்தள் அரக்கர்தமை – அருஞ்சமரில்
இமசித்திட்ட 'சினந்தணிய', கானப்போரில்
ஈசன் தனதமை "**தங்கவல்லி** தயவினளாய்,
அம்சம் தந்து, ஆட்கொண்ட, இடமிதை
தேவி கோட்டை எனச் சான்றோர்கள், சாற்றுவதுண்டு.
இம்மன்பதையில் இனிய மனத்துச் சேயிழையார்
ஈங்கு மனையறம் நன்காற்றும் தேவியர் கோட்டையிது.

வெள்ளையனே வெளியேறு

கொள்ளையடித்த வெள்ளையர்மேல்
கோபங்கொண்டே இவ்வூரார்,
வெள்ளையனே வெளியேறென்று
உறுதியாகச் சுதந்திரர்கள் முதலில்,
கொள்ளித்தீயிட்டனர் நீதிமன்றச்
சந்திப்பில், அன்னவரைத் தரையிற்,
தள்ளித் துப்பாக்கியாற் சுட்ட இடமே இன்று
தியாகியர் பூங்காவும் சாலையுமானதுவே.!

தேவகோட்டையர் பொதுப்பண்பு நலம்

தெள்ளியமனத்து வில்லாளர்,
தேருங்கருத்து ஆராய்ந்தறியும் பேரறிஞர்,
உள்ளமனத்துச் செம்மையிலே உயர்ந்தே,
உரைசொல்லும் வல்லவர்கள்,
வெள்ளியம்பலத்தில் நடனமிடும் விரிசடைக் கடவுள்
இளவல் குமரனுக்கடியவர்கள்,
அள்ளிச் சேர்த்த அரும்பெரும் நிதியத்தை
தேவைகேற்ப சரி திட்டமிட்டு,
நள்ளிச் செலவிடும் ஞாயத்தார்
துல்லியமாகக் கணக்கிடும் தூயவர்கள்,

எள்ளளவுச் செலவிடும் எதுவெனினும்
எண்ணிப் பண்ணும் நுண்ணியர்கள்,
பள்ளம்நாடி ஓடும் நன்னீர்போல்,
முயல்வில் சலியாத் தொழில் முனைவோர்கள்,
குள்ளகுள்ளக் கணபதியின் செல்லத்தம்பி
குகனுக்கு பரம்பரை அடியவர்கள்.

ஊரின் இயல்பு

சதிகள் இல்லையோர் ஈங்கு யாவரும் சரிசெய் மனிதரானதால்.
விதிகள் இல்லையோர் நெறி நிலை தவறலின்மையால்,
நிதிஅதி கரில்லையோர் ஈங்கவர் பகிர்ந்து வாழ்தலால், பெரும்
சிதடர் இல்லையோர் இவணர் செம்மனச் செம்மல ரானதால்

மடமை இல்லையோர் இவணர் மதிநிறையர் ஆனதால்,
முடைகள் இல்லையோர் இவர்கள் நிதிகளாண்மையால்.
தடைகள் இல்லையோர் ஈங்கவர் பகிர்ந்து வாழ்தலால்,
விடைகள் இல்லையோர் இங்கவர் விவரமறிதலால்!

தேவகோட்டை சிறப்புகள்

சுதந்திரப் போரட்டத் தியாகிகள்:

சுதந்திரம் நமக்குக் கட்டாயமென்று போராடிச் சிறைசென்ற,
விதம்படுவரிசையில் டி.ஆர்.அருணாசலம்
சின்ன அண்ணாமலையோடு,
இதம்தரும், சுப. திருநாவுக்கரசர், தினமணியார்
ஆர்ச் அண்ணாமலையாரை,
நிதந்தொறும் இவ்வூரார்போற்றி நினைத்து
மனதிற் கொண்டாடும் நிர்மலராம்...

முகவை மாவட்ட முதல் நகராட்சி

முந்தைய முகவை மாவட்டத்தில் முதல்
நகராட்சி இவ்வூரென்று இன்றையச்
சந்ததி யார் பற்பலர் அறிவதும் மிக நன்றே,
மென்மேலும் கொண்டுவிற்று
வந்தபெரும் நிதியர் தனவணிகர் தம்
செட்டிநாடதனின் தலைநகரிதுவே,!
அந்தப் பெருமையும் இங்கு உறையும்
ஐயாயிரத்து முன்னூறு புள்ளியராலே தான்..

சிவன் கோயில் முந்தைய நிர்வாகம்

முப்பது ஆண்டுகளாய் ஒருதனி ஆளாய் சிவாலயத்தை நிர்வகித்த
அப்பழுக்கில்லா அருமைச் செல்வர் "சொர்ணரை"–எப்போதும்
மறவாமல் மனதில் இருத்துவர் நல்லோர் இவ்வூர் நகரத்தார்
அறவழியில் இயலும் அன்பர்களாம் இவர்.!

இப்போதைய சிவாலய நிர்வாகம்

புரிசடைக் கடவுள் ஆலய மேற்பார்வையை
இவ்வூரிலியலும் இனிய நகரத்தார்,
சரியாய் ஈராண்டுக்கொரு முறை சுழல் முறையில் –
நிர்வகிக்கும் நெறிமுறையை
நிறைவாய்க் கூடி நியமமதை முடிவெடுத்து,
நல்லவகையில் பணிபுரிய
வரையறுத்தார் அன்றே அவரெலாம்..
வாழிய அன்னார் அவரெலாம்
சீர்படவே மேற்படியார் தோதமைத்த
சிறப்புடை பேர்கொண்டு சரிபார்த்துப் பணிபுரிய,
ஆர்வமுடன் ஐந்துவகையார் **பதினாறு**
ஆண்டுக்கொருதடவை ஆற்றும்படி
கூறிய மேலாண்மை தகுதிபட செயல்கள் ஊக்கமுற
நேரியமே என்றளவும் நியமமுற நேர்செய்த
ஊரினர் ஒற்றுமைத் திறமையதன்
நன்மையினை கூறிடத்தான் தகுதியனோ நான்?

நாற்பது வகை நகரத்தார் நலமாய் வாழும்
மேற்படி தேவியர் தனியூரில்,
ஏற்று நடத்தும் நற்செயல் ஏதும் தோற்பதில்லை
அவர்தம் ஒற்றுமையால்,
போற்றிடும் அறங்களும், புண்ணியச் செயல்களும்
எத்தனை எத்தனையோ!
மாற்றங்கள் ஆயிரம் நிகழ்ந்தாலும் மாபெரும்
கொடையிற் நிறையாளர்கள்,–
ஆற்றிடும் தமிழ்மறை வழிமுறைச் சரி நெறியை
ஏற்கும் அன்பிற்கினியவர்கள்,
ஆற்றிடுந் தொழில்கள் மற்றும் பணிகளிலும்
தேறும்வல்ல மனத்தினர்கள்,
நூற் படும் நுட்பங்கள் யாவினையும் நுணுகியே
நோக்கும் நுண்ணறிஞர்கள்.
நீற்படு நெற்றி குங்கும சந்தனம் நிதந் தவறாது
அணிந்தே மகிழும் சைவர்களாம்..

"**தேவகோட்டை நகரத்தார் தரும பரிபாலன சங்கம்**" என்பதனை இந்திய
அரசாண்மைச் சட்டப்படி ஆயிரத்து
தொள்ளாயிரத்து அறுபதாமாண்டு.
மேவும் புதுக்கோட்டை பதிவலுவலகத்தில்
இவ்வூர் நகரத்தார் நாற்பது
வகையாரும் தொடர்ந்து நன்மையே நாடிப்
பதிவிட்டது ஓர் அருஞ்செயலே...

நாக்கினில் திடமாகச் சிவனார் நடம் புரி
சேக்கிழார் மணியொன்று திகழும் நல்லூரிது...

நகரச்சிவன் கோயில் அமைப்பு

அம்கயல் கண்ணிமீனாள் அழகென இயலும் மதுரை கோயில்போல
இங்கும் இறைவன் இறைவிக்கு இரு ராச கோபுரங்கள்!
தனித்தனியே குணதிசை நோக்கி அமைத்தனர் ஈங்குறு நகரத்தார்
இனியவே செய் நற்பண்பு நல்லோர்கள்.

தண்டாயுதபாணி பெருமை

ஒப்பிலா இந்நல்லூரில் திகழும் தெண்டாயுத
பாணிசாமிகள், திருப்பழனி
அப்பனே போல உச்சியில் குடுமி உள்ளது
அருமை யெனச் – செப்பவோ
வள்ளல் இத்தெய்வம் பேரால் வண்ணச்
சரப தெண்டபாணிசாமிகள்,
பிள்ளைத்தமிழ் பாடியமை, உள்ளதில்
உயர்ந்த சான்று ஆகும்.

தேவகோட்டை தேர்கள் நான்கு

திருமால் இருகோயில் **தென் வடகலைக்கு**
இரண்டு தேர்களுடன்,
அரன்சேர் அம்பாளுக்கும் இரு தேர்களென
மொத்தம் நாற்தேர் ஒரு படத்
திருத் தேர்களமைத்து திருவிழாக் கொண்டாடும்
இத்தனவணிகர்
அருமை உணர்வை எங்ஙனஞ் சொல்ல
எந்தமிழால்?

நாற்றிசை காக்கும் நற்தேவியர் நால்வர்

குடதிசை **புவனேசுவரி,** குணதிசையதனில் **முத்துமாரி,**
வடதிசையிற் **பத்ரகாளி,** தென்றிசைதிகழ் **பெரியநாயகி** – திடமாய்த்,
திசை நான்கிலும் அமர்ந்தவர் காப்பதனால், நலங்கள்யாவும்,
இசைந்தே அமைந்தது இவ்வூரில்.

சிற்பச்சிறப்பு

பள.செ.வகையார் கோவிலும், தீனா
உருணி கோயிலிலும், தூண்களில் அமைந்த,
அழகிய சிற்பங்கள் அத்தனையும்
அருமை! அருமை! அழகற்புதமே!
கலையமை தீனா உருணி காரிகை
விசாலாட்சி சன்னிதி பின்புறம்
நிலத்திற்திகழும் நிழற்குத்துவிளக்கு
அமைப்பு நல்லதோர் அதிசயமே.!

எண்பது ஆண்டுகளாய் இயலும் கந்தர் சஷ்டித் திருவிழா

எண்பது ஆண்டுகளாய் இவ்வூரில்
நிகழும் கந்தர்சஷ்டி திருவிழா,
பழுதின்றி இயலும் திறமையது உலகம்
யாவும் அறிந்த நற்செய்தி,
அழகுற அணிவகுத்து நடத்தும் சிறப்பியல்
செயல்கள் யாவும் செவ்வனே,
பழகுந்தமிழின் பாசத்தால் பண்பிற்சிறந்த
நகரத்தார்கள் செய்யும் நன்மையிது.

சேக்கிழார் திருவிழா

ஒவ்வோராண்டும் வைகாசிப் பூசத்தன்று
இங்கு இயலும் சேக்கிழார் விழாவில்,
இவ்வூரில் பெரியபுராண முற்றோதலை
முறைப்பட நடத்தி நகரத்தாரில்
செவ்வியர் ஒருவருக்கு "சிவநெறிச் செம்மல்"
பட்டம் நல்கிச் சிறப்பித்தல்
எவ்வூரில் அமையும்? அறிவிலியல் அன்பர்கள்
யாவரும் செவ்வியஞ் சொல்வர்நயமாக.

தேவகோட்டையின் மகத்துவங்கள்

கலைக்கழகம் - தமிழிசைச் சங்கம்,
ஞான தான சபை

'ஞானம் நல்கும் தானசபை' வாரந்தோறும்
வியாழக்கிழமை மாலைப்பொழுதிற்
ஞாலம் புகழும் திருக்குறளோடு திருவாசகமும்
நலமாகப் பயில்விக்கும்
சீலங் கொள் நற்செயலோடு, ஆலநீழல் அமரும்
இறைவன், மனைவியர் மனமகிழ,
கோலமிகு திருவாசகத்தை பத்துநூறு (ஆயிரம்) முறைக்கு
மேலிங்கு ஓதியதோர் நன்னிகழ்வே.!

கலை இலக்கியப் பெருமன்றம்

தேவகோட்டை கலை இலக்கியப் பெரு
மன்றஞ்சார் பாரதித் தமிழ் சங்கத்தார்,
ஓவியமாக இலக்கியஞ்சார் நன்னிகழ்வுகளை
நன்றாயிங்கு நடத்துகிறார்
மேவுமிங்கு பிரவசனசபையார் ஆண்டுக்கு
ஒரு வாரகாலம் இலக்கியச் சேவைகளை
நிலமாள் மேன்மையர் சோம (நாராயணனார்)
தலைமையிலாற்றுவதும் ஒரு நயமே.
பால தண்டாயுதபாணி டிரஸ்ட் பங்கு அதிகம்
உண்டு சேவை தனில்.

தேவகோட்டைப் பதிப்பகத்தார் சிறப்பு

உதிக்கின்ற நற்கருத்து சிந்தையரின்
உள்மனத்து கற்பனைகளை வடிவமைத்து,
பதிப்பிக்கும் பணியைப் பண்பாக நிறு வகிக்கும்
மேன்மையில் இவ்வூரார் பலர்,
விதிப்படி மொழி நலங்காக்கும் முதனிலை
முன்னோடிச் செயலாளர்கள்
அதிகம் இங்கு ஆகவே அதற்குறு தகவுறு
தயவாளர்களாய்த் திகழ்வது இப்பதியாமே.

பதிப்பாளப் பெருந்தகையோர்

சாந்தி பிரசுராலயம், நவயுகபிரசுராலயம், இந்தியா புத்தகத்தார் என்று பதிப்பக முன்னோடிகளால் தொடர்ந்தது – ஓர் நற்செயலே.

பாரதி, வானதி, மணிமேகலையுடன், அருணோதயம்
சீர்மிகு தமிழ்ப்பண்ணை, இன்பம், கவிதா, குமரன்
பொன்முடி எனப் பதிப்பித்து பிரசுரிக்கும் பணியர்,
நன்மையாற்றலர் பிறந்த சீர் பதியாகுமிது.

நீதி நல்லோர்

உச்சநீதிமன்ற நீதியரசப் பெருந்தகை
இலக்குவர் கற்பக விநாயகமும்,
பச்சைப்பாலகர் நயந்தேத்தத் திகழ்ந்த
தமிழ்வாணர் மற்றவர் மகன் **லேனாவும்,**
நிச்சய நிகழ்வுகளை வழிகோலி, நிதிமிகுநாட்டின்
அதிபதி **ஓபாமா** வெல்ல,
உச்சபட்ச யோசனை சொன்ன வள்ளல் வழித்
தோன்றல் **ஹரியும்** இவ்வூரார்களே.

மற்றைய மாண்பாளர்கள்

உரையாற்றல் உத்தமர்கள் காசி **ஸ்ரீ அரு.சோ,**
சொசொமீயுடன், சபா அருணர்,
கரவொலி மன்னர் **சிற்சபேசர்** திரைப்பட
இயக்குனர் வசந்தருடன்,
நிதி அலோசகர் **சோம வள்ளியப்பர்** வங்கியர்
சோம. வீரப்பன் மற்றும் **இரவிவெங்கடாசலத்தார்,** நிலமாள்
நேரியர்வீட்டு நெறியர் சுப நாராயணர்
சொற்பொழிவாளச் செம்மல்கள் இலக்கிய
மேகர் சீனிவாசர் பழனி இராகுலரும்,
தேவக்கோட்டையிலிருந்து மகன்மை, சென்ற
மேவு இராமநாதரும், இவ்வூருக்குத்
தனியாய் புகழ் சேர்த்தவர்கள்.

இன்னோரன்ன செவ்வியரின் சிறப்பை
சொல்ல எமது தமிழ் போதுமா?
உன்னதஞ்சொல்லும் விழைவதனால்
இவ்வூரர் நயங்களை விள்ளுகிறேன்.

திரைப்பட இயக்குனர் **சுப. முத்துராமரும்,**
திரைப்பட நாயகனாகிப்பின்
அரசியல் தலைவர் **விஜயகாந்தரும்**
தே. பிரித்தோ பள்ளி மாணவர்களே!
கிருத்துவர் நடத்தும் கல்விக்கழகத்தில்
ஒழுக்கமும் கல்வியும் உயர்நிலைப்பட
திருத்துவரெனும் எதிர்பார்ப்பும் திறமை
வெளிப்படும் திட நம்பிக்கை.

தேவக்கோட்டை சிறப்பு பக்கம்

தனுஷ்கோடியில் சத்திரங் கட்டிய
சித. முரு. இராமநாதர்
அனுதினமும் உணவு நல்கிய நனிசிறந்த
நல்லவர் – இனிதினுமினிய
அன்னவர் இறைமை எய்தியபின்
ஊனுடலைத் தகனிக்கையில், அம்
மன்னவரின் வலதுகரத்தை
தீத்தீண்டாதது என்னநலம்?

மேலை வீட்டுச் **சின்னையா** மிகுநுண்
தமிழ்ப்பால் அவர் காட்டிய அன்பால்,
வேலங்குடிக் கல்வெட்டாய்ந்து நகரத்தார்
விவரஞ் சேர்த்தவர் – சாலப்
பெரும் நான்காம் தமிழ்ச்சங்க நிறுவனர்
பாண்டித் துரையாருடன்
யாண்டும் நற்பணியாற்றிய நல்லவர் (என்றும்) வாழியவே!

பலதுறையில் பண்பட உயரிய நிதிநலமிகு தனவணிகர் பலர்

திரைகடல், ஓடி திரவியந் தேடிய நிறைமை மதியர்
வரையறை வள்ளல் **மேனா,**
சிரசிற் கங்கை அரையிடை அரவம் பரசுவும் தாங்கிய
பரமனின் திருப்பணியில் மிகவிழைவர்களாய்
திரைகடல் மேவிய திறன்மிகு இந்தியன் ஓவர்சீஸ்
வங்கியில் நிரைகெழு இயக்குனரே
தரமிகு சால்பில் சான்றோராவர் முறைநிலை தவறா
சரிநிறை இந்தியன் வங்கி, இயக்குனர்
உ.மு..சுப.லெ. மெய்யப்பர்

வரைமுறை அதிமிகு நிதியியல் நேர்மை மதுரை வங்கியிற்
சேவுகன் அண்ணா மலையண்ணல் மற்றும்,
பெருநிதிப் பெரியவர் **லேனா அழகப்பர்,** காரைக்குடி வணிக
வங்கியில் **மெ.லெ. மகாலிங்க மாமனிதர்** இவர்
யாவரும் இயல் பேரமுதுச் சேயிழைச் செல்வித்
திருமகளின் அருளை நிறையப் பெற்ற பேராளர்கள்
கறையேதும் படா கரங்களைப் பெற்ற கருணை நிறை
இதயம் பெற்ற இனிய மனத்துச்செம்மலர்கள்.
விரவிய வணிகம் விழைந்தே ஆற்றிய அரும் பெருங்
குடும்பத்து உயர் அங்கத்தினர் இவர்கள் வாழிய!
உரைநலங் கொண்ட உத்தமச் செல்வந்தர் வீட்டுப் பரம்பரை
பண்பைக் காத்த பான்மையர்கள் வாழியவே!!!

மற்றைய வழியில் மாண்புற விளங்கிய இவ்வூர்த்தன வணிகத்தார்கள்

ஆலைத்துறையில் அற்புதம் ஆற்றிய நீர் படு
நித்திலமன்னார் நெய்தல் நூற்
பாலை **சாத்தப்பர்** நிலைமாண் நேரியர்
குலத்து **வெள்ளையர்**
சீலப் பெருந்திகழ் சீனி ஆலையுடன் காகித
ஆலை நிறுவிய **சத்திரம் சோமசுந்தரர்.**
ஆந்திரா வங்கித் தலைவர் **இராசேந்திரர்,**
இந்திய ஆட்சி பணியிலே
மீனாட்சி சுந்தரனார் ராம. லெட்சுமணர்
அறிவிற்செறி நல்லோர் மகிழும் இவர் போன்றோர்.
பற்பலர் பிறப்பாற் சிறந்த இம்மண்ணின்
மைந்தர்கள் சேவைபுரிச் செம்மல்களே
சரித்திரத்தில் இவர்களின் பேரனைத்தும்
நித்தியம் நிலைக்கும் இது சத்தியமே!
கருமமே என்று கண்ணாய் எண்ணிய
புண்ணியத்தன்மைப் புனிதர்களே!

அறிவிற் சிறந்த ஆன்றோர்கள் அன்பினில் நயமுணர் நன்மையர்கள்
செறிவிற் புரிவுடைச்செந்நெறிமானுடவாழ்வியல் சித்தர்கள்
குறித்த முடிவுற திருத்த நற்செயல் வித்தகர்கள் மேவும்
திறத்தர் திகழும் தேசமிது திண்ணமுயர் நண்ணியர் மண்ணிது.

வெண்பா

தமிழகத்தில் பெருமளவில் தம்மால் இயன்ற
திருப்பணி, உற்சவ மண்டகப்படிகள்
தமதென்னுந் தகவுற ஆற்றிய இவ்வூர்
இறைபணி நகரத்தார் அதிகம்–அமிழ்தெனும்
இயல் நலம் பேணல் அக்காலத்திய இயல்பாகும்,
அவர் தம்முளும் அலைமகள் நல்லருள் பெற்றவரே!
வியன்நிரை வித்தகர்கள் ஆனவரே.

பரம்பரை நகர முக்கோயில் அறங்காவலர்கள்

இலுப்பை, வேலன், இளையாற்றம் குடிமூன்றுக்கும்,
நலஞ்செய் அறங்காவலர் பணி பரம்பரையாய் – வலமாக,
இவ்வூரார் ஏற்றம் பெறவே ஆற்றுதலால், இன்றுமந்த
செவ்வியம் தொடர்தல் மிகப் பெருமை.

தேவகோட்டை நகரத்தாரில் இறைமை எய்திய போதும் இன்றும் நினைவில் நிற்கும் உயரியர்கள்

இறைமை எய்திய இவ்வூர் பெருஞ்
செம்மனத்துச்சீரிய செம்மல்கள்,
முறையாய்த் தமிழ் மகாவித்தகர்
மீனாட்சிசுந்தரரிடம் மொழியை கற்ற,
வன்தொண்டர் நாரணரும், நிறையாள்
நிலமேலாண்மையர் **ஜமீன்தார் சோமையா,**
அன்பே சிவனெனும் அறிஞர்சிவ சத்புருட்
தேசிக **பாலகவி வயிநாகரர்**

குறையேதுமிலா குடிமைக்குப்
போராடிய வங்கசிங்கம் நேதாஜியின்
இந்திய சேனையில் நிறைவாய்
பணியாற்றிய **சொக்கலிங்கர்** எனும்
அரும் பெருஞ் செல்வர்களை அரிதாய்
ஈன்ற பெண்ணினத்துப் பேரரசிகள்,
தருமமென இல்லறம் பேணிய பூமியிதன்
பெருமையையே யாம்பாடலுற்றோம்.

ஈங்குறு கல்விக்கூடங்கள், கல்லூரிகளின் சிறப்பு

கற்றே அறிகிற நுட்பத்தை
நற்றவமாக இவர்கள் நண்ணுதலால்.
கவனக்கருத்துமிக உடையவர்
இந்தகரத்தாரனைவரும் – எற்றைக்கும்
நிகரறு கல்விப் பணியர் இவ்வூரில்
ஏராளர் என்றொரு பண்புநலம்.
பகரப்படுகிற பொதுமொழியது
செட்டி நாட்டு வட்டகையில்.

சேவுகன் அண்ணாமலையார்

நடுத்தர வங்கியே மதுரை எனினும்
நியாயர் பலரங்கு இயக்குனராக,
அடுத்தடுத்திருந்தனர் அவருள்ளும்
அண்ணாமலை என்றொரு
மிடுக்குடை மேவலர் வந்ததனால்
அதிற் பலர் இவ்வூர் இளையர்க்கே
நடத்திய பணிக்கொடை பேராளரை
என்றும் மறவார் இவ்வூரார்.

சேவுகன் அண்ணாமலை கல்லூரி

கொடுத்தது கோடிகள் வள்ளல்
சேவு.அ. குடும்பத்தார் என்றாலும்,
நடத்தியதெல்லாம் நன்மைகளெனத் திடமாய்ப்
பலரறிவர் அவர்தம் – கடமை
உணர்வைப் பறைசாற்ற இவ்வூர் அண்ணாமலை கலைக்கல்லூரி,
நின்றே நிலைத்துப் புகழை என்றும் சொல்லும்.

மருத்துவமனை

ஊனுடல் நலத்தைப்பேணல் நலமென்ற **திருமூலன்,**
தானுரைப் பொருள்நலம் புரிந்த பெரி **சோம சாத்தப்பர்** ஆனவழி
அதுகூட அவர்தம் நிதிநலங் கொடுத்து நிறுவியதை,
எதுசொல் கூறிஏற்றம் எழுதிடயானிங்கே.?

பழனிக்கு இரத்தின வேல் எடுத்தல்

வள்ளிக்குறத்தி மணவாளனுக்கு
வருடமொருமுறை நடைபயணத்தில்,
உள்ளநலம் உயரிய பான்மையினால்
மாசிமகந்தோறும் **இரத்தினவேலை**
உள்ளி உணர்ந்தே எடுத்துச் செல்லும்
நயினப்ப செட்டியார் குடும்பத்தார்
கொள்ளா நல்லுணர்வால் மகேசுவரனுக்கு
முப்பொத்தோருமுடை அன்னம் பாலிக்கும்
எள்ளரு இறையன்பை எமதருதமிழில் இயம்புவது,
இயல் தமிழ் முருகனருள் நலமே.!
வள்ளல்கள் ஈவது பெருஞ்சிறப்பெனவே
இம்மன்பதையோர் அறிவோர் என்றாலும்
தள்ளாமல் கொடுக்கிற தயவினைத்
தன் வயிற்றில்வளரும் கருவுக்குத்தயவாய்
உள்ளில் உணர்த்தும் இங்குறு தாயர்களின்
பயன்பாடுணர்வைப் பாராட்டல் எமதருங் கடமையதே.

பல்துறை வல்லுனர்களை பயணித்தது இம்மண்ணே !

சொன்னலம் மிக்க சுந்தரச்சொல்லரசர்
சுவைபடச் சொல்லும் வித்தகர்கள்,
பன்னலம் பாடும் பைந்தமிழறிஞர்கள்,
எந்நலம் பயத்தில் இனிமையெனத் தினம்
எண்ணும் உள்ளத்து அரியவர்கள்,
ஏற்றம் தரும் செல்வ நிதிநிலைவணிகம்
உன்னும் ஆற்றல்கெழு வல்லுனர்கள்.
மண்ணுள மாந்தர் மகிழுந்திரைப்படத்
துறைப் பெருமைப் பெற்றியர்கள்,
பொன்னெனத் தகும் பிரசுரப் பதிப்பக
மன்னர்கள் மற்றும் மாந்தர்தம்
நன்மனப் போக்கை நிதம்நல்கும்
ஆன்மீக வழியுரை அருமையர்கள்,
உந்தும் முயல்வினை முதற்கொண்டு
உரியநிதி முதலிட்டு செம்மை பெற,
என்றும் அரிய பணிசெயல் ஆற்றலர்கள்,
உன்னதத் திருப்பணி, திருவிழாக்கள்
உபயமளிக்கும் அன்புச்செல்வர்களமை
பொன்பூமியிதன் அருமை பெருமைசொல
எந்தன் தமிழிதற்குத் தகுமோ வேலவனே?

தேவகோட்டை நகரத்தாரின் இறைப்பணிகள்

1. இராமேச்சுரம்

அலையறு அமைதிக்கடல் மலைவளர்
காதலி இராமநாதர் திருமுனம்
நிலைபெறும் குணதிசை கடல்நோக்கி
ஒன்பதுநிலை கோபுரம் செலவினம்,
பாராமற் செய்த நிலாமாள்
நேரியகுடும்ப **அள.அரு.**
பரம்பரை, நேரியங்கூற
நேர்தமிழ் யாம் நவின்றனமே.

2. காளையார் கோவில்

திருக் கானப்பேர் திகழ்
காளையப்பர் பொன்னம்மை
அருங் **காளீசுவரர் அழகம்மை**
அம்கயல்கண்ணி சுந்தரர் பெருங்கோயில்
திருப்பணியதனை சிவகங்கை மன்னர்களுடன்,
உயர்வுறச் செய்தவர் **ஜமீந்தார்** குடும்பத்தினரே.

3. திருஜயாறு

ஐயாறப்பர் அறம்வளர் நாயகி ஆலய
அம்பிகை சந்நிதிமுழுதும்
மெய் நிதி வருத்தம் பாராமல் புதுப்பித்த,
வள்ளல் மேனா வின் இளவல்களும் – துய்ய
அன்புச் சைவநெறி புலப்படச்
செய்த அவரின் அறஞ்செய் மனத்து
நன்மையைப் பரவிடப் பாடினம் எம் செந்தமிழால்..

4. திருஇடை மருதூர்

உரைநெறி உணர் பட்டினத்தார்
குணதிசைக் கோபுரம் அருகமர்ந்த
திருவிடை மருதூர் மகாலிங்கர்
பெருநலமாமுலை நாயகி – அருமை,
தெரிந்த **மெ.லெ.மெ. குடும்பத்தாரின்** இறைப்பணியை,
புரியச் சொன்னோம் எம் பைந்தமிழால்.

5. திரு உத்திரகோச மங்கை

மணிவாசகன் அணிபெறப் பாடிய
உத்திரகோசமங்கை நல்லூர் திருப்
பணியாற்றி **அழ.சித.லெ.இராம** மற்றும்
நிலமாள் நேரியர் அணிபெறச்
செய்த அவர்தம் திறத்தை எளிதில்
அளவிட இயலா அருஞ்செயலது
மெய்யம்மை அற்புதமாகும் இம்மன்பதையில்...

6. திருச்சுழி

இரமண மகாமுனிவன் பிறந்த ஊர் திருச்சுழியில்,
திருமேனிநாதர், துணை மானனைய
தேவியுறை–பெருங் கோயில்
அருமைப் பதியில் **தி.ஆ.சு.அண்ணாமலையார்**
சிவன்கோயிற்
திருப்பணியை திவ்வியமெனச் சொல்லுவர் செவ்வியரே...

7. திருக்குற்றாலம்

குறும்பல நாதரொடு குழல்வாய்
மொழியாள் உறை குற்றாலத்து,
அருவிகள் கொட்டி எழில்கொழிக்குங்
கோயில் திருப்பணியை,
பெருஞ் செலவில் **வி.கரு.சோம.**
மற்றும் **பி.ச.அரு** பரம்பரையார்,
திறம்பட ஆற்றியதை என்சொல? எந்தமிழால்.

8. திருவான்மியூர்

திருவான்மியூர் மருதீசருடன்
சொக்கதேவி உடனமர் கோயிலின்
திருப்பணியை, **முரு.கி. இராமநாதர்**
தன்மனம்–விரும்பிச் செய்த,
அருஞ்செயலின் சிவநேயத்தை
தருமமெனச் சொலவோ இல்லை.
அறஞ்செயலார் குணமெனச் சொலவோ?..

9. திருவேடகம்

ஏடகநாதர், ஏலவார்குழலி
உடனமர் கோயில், திருப்பணியை,
சேடர்களனைய செல்வந்தர்கள் **உ.ராம.மே.சுப வீட்டு**
அங்கத்தினர் மூவர் – நாடிச் செய்த
நன்மையினால் அவர்தம்
பேர்கள் இன்றளவும் இவ்வூரார்,
தொன்மை நினைவில் நின்று உயர்கின்றனரே...

10. திருவெண்ணெய்மலை (ஐயர்மலை)

சுரும்பார் குழலி உடனுறை இரத்தின நாதர்
வெண்ணெய்மலை தனில்
அரும்பெரும் தமது நிதியத்தில் **தி.சு.பழ. சுப**
முத்துக் கருப்பர் – மறுப்பின்றி
செய்த திருப்பணிகளின் சிறப்பைச்
செப்பிடச் செந்தமிழில்
நயமுற உளங்கனிந்தே யாம் பாடுகிறோம்...

11. திருவெண்காடு

மும்மரங்கள்கொன்றை வில்வம் ஆலமரம்,
முந்நீர்சூரிய, சந்திர, அக்கினி
மும்மூர்த்திகளுடன் வெண்காடன்பிரம
வித்தைநாயகி–அம்சமென,
அமைந்த வெண்காட்டுக் கோயிலுக்கு,
மு.இராம.சுப.குடும்பத்தார் மனமகிழ,
அமைத்தது நற்பணியே என நவில் மனமே..

12. வேதாரண்யம் (திருமறைக்காடு)

திருநாவரின் ஒருபத்து பாடல்களுக்கு
திருக்கவும் திறந்த இறையருள்,
திருஞானரின் ஒரே பாடலுக்கு
கதவஞ்சாத்திய–பெருமையுடை,
திருமறைக்காடன் யாழ் பழிமொழியாள்
ஆலயத்திற்குச் **சத்திரத்தார் வீடு,**
பெருந்திருப்பணி செய்ததும் ஒரு பெருமையே...

13. திருப்பூவனம்

பொன்னனையாளெனும் பொன்னாலான
நடனமயில் இறைவனுக்குப்
சின்னம் செய விழைந்ததற்கு,
சித்தனாய் இறைவனே–மின்னெழில்,
வடிவமைத்த கோயிலமர் பூவணநாதர்
மின்னனையாளுக்கும். **ஊனாழுனா,**
குடும்பத்தாரின் திருப்பணியே உயர்வென்றறி!...

14. கோட்டூர்

தேவகோட்டை அருகில் கோட்டூர் எனும்
திருத்தலத்தில், தீனா வகையார்,
ஓவியமாய் அகத்தீசர், சௌந்திரத்தாளுடன்
கருப்பர் ஆங்கே – ஒப்விலாது
அருளுவதை உளத்தால் உணர்ந்த
மாயாண்டிப் பேராளர் ஆலயமங்கு,
நிறுவிய நேர்மையை யாம் நுவல வல்லவனோ?..

15. மதுரை (திரு ஆலவாய்)

செம்மனத்துச் சீராளர்கள், **மேனா.ராம. ஆனாவும்,**
பள.சுப. ஆனாவும் மதுரை,
இம்மையில் நன்மைதருமச் சிவாலயத்துக்குச்
செய்த நயங்கள் – எம்மையும்,
இல்லா ஈசன் பாதம் மேவிட
அருளியதை நீளநெடுந் தமிழதனில்
நல்ல விதமாய், யாம்பாட
இறைமை எமக்கருள்கிறதே...

16. மயிலாடுதுறை:

அம்சொல்நாயகி, அபயாம்பிகையாளொடுறை
மயில்நாதரை பார்வதியாள்
தம்வசமாக்க எண்ணி மயிலாய் வந்து
துதித்தமையறிந்து – தம்வச நிதியால்
இவ்வூர் **அழ.பெ.வீர வெங்கடாசல** மென்பார்
ஆற்றிய நற்செயற் திறமதனை
திவ்வியமாக தென்தமிழால்
தேர்ந்துரைப்பன் அவர் வாழியரோ !..

17.காஞ்சிபுரம்

மாஞ்சோலை மரமது மூவாயிரமாண்டு
முந்தியதில் ஏகம்பன் தனித்திருக்க,
பூஞ்சோலைசூழ் காஞ்சியதில்
காமாட்சியருள் பொற்புறவே – வாஞ்சாலையுடன்,
இவ்வூர் **லெ.லெ.ராம. குடும்பத்தினர்**
செய்திட்ட திருப்பணிகளத்தனையும்
எவ்வூரரும் அறிந்திட மகிழ்வார் என்று இயம்புகவே...

18. திருக்காளத்தி

மட்டிலா அன்பால் தம்கண்களை
ஈந்த திண்ணனெனும் கண்ணப்பனூர்,
பட்டினத்தடிகள் பாடிய கோயில், காற்றி ஆடும்
ஒளிவிளக்கமை – செட்டி நாடர்
விரும்பும் திருக்காளத்திக் கோயிலுக்கு
இவ்வூர் **ராம.மெ.சித.வழியினர்**
கருதிச் செய்த திருப்பணிகள் பெருநலமே...

19. திருக்கோலா

ஒலிதருநாதன் ஓசைநாயகி உடனமர்
கோயில் திருக்கோலக்காவில்
கிளிபொற்தாளம் இறைவன் சம்பந்தனுக்கு
நல்கிய – அளிபெருங்கோயில்
தனக்கு இவ்வூர் **மெ.அரு.இராம. குலத்தினர்** ஆற்றிய,
திருப்பணியவைகள் செப்பிடச் சிறந்தனவாகும்!

20. அகத்தியான் பள்ளி

ஓதியெலாம் உலகுக்கு ஒண் பொருளாய்
மெய்ச், சோதியாம் ஆலத்துறை
ஆதி அகத்தீசர் பாகம்பிரியாள்தமக்கு – நீதியார்
ஆற்றிய நற்றிருப்பணிகள் **பழ.சோம** விலாசத்தார்
நாற்றிசையும் நவிலும் நன்நயமே...

21. உறையூர் (திருமுக்கீச்சுரம்)

உதங்காமா முனிவனின் மாதவத்திற்கு மிக இரங்கி
விதம் ஐந்து வண்ணனாய் நாளெலாம் இதங்கொள்ளும்
இறைவர்க்கும் காந்திமதிக்கும்,
திருப்பணிகள் **சித.மு வீட்டார்கள்**
உறையூரிற் ஆற்றியமை நனி சிறப்பென்று பகர்...

22. பல தலத்திருப்பணிகள் இரட்டை ஆனா ரூனா

திருப்பிரம்மபுரம், திருக்குத்தாலம், திருவாடானை,
திருநாவலூர், திருப்பட்டீசுரம், திருவாரூர்
திருக்கடம்பூர், திருவீழிமிழலை, திருநாவலூர்,
கோட்டைவயல் பிடாரனேந்தல் போலும்
சிவத்திருத்தலங்கள் அறுபத்து நான்கினுக்கு
இரட்டை ஆனா ரூனா முகவரியார்
அருமையுறு திருப்பணிகள் பற்பல
வாறாய்ச் செய்தமையை,
ஒருபட மனதின் உள்ளுணர்வால்
நிறுவி ஆற்றிய நேரியத்தை,
கருத்துறக் கழல்வதற்குக் கன்னித்
தமிழில் கதியிதுவென மிகநம்பி,
தருமொழியே யாமுரைத்தோம் அச்செவ்வி
யர்கள் என்றும் நன்றாய் வாழியரோ!..
அருமையர், அன்பினர், தருமநிலைத்
தருவதில் உயர்ந்தவர் அன்னவரே.

23. திருக்காரவாசல்

கண்ணாயிர நாதன் கயிலைநாயகியுடன் நண்ணியனாய்,
வண்ணமுற உறையும் கோயில்
திருக் காறைவாயிலில் திண்ணமுற
முத்து.கரு. குடும்பத்தார் திருப்பணிகள் அத்தனயும்..
எத்திசையும் ஏத்தும் எழில்...

24. திருவிசைநல்லூர்:

திருவியநல்லூர் அமர்ந்த யோகானந்தர், சாந்தநாயகி உடனுறை
அரும்பேரூரில் அகத்தியன் தவஞ்செய் – திருக்கோயிலுக்கு,
திருப்பணிகள் **அ.ராம.அ.லெ.லெ.மு. பரம்பரையார்**
சிறப்புறச் செய்திறம் என்றும் நேரியமாம்...

25. ஆண்டான்கோயில்

ஆண்டார் கோயிலெனும் திருக்கடுவாய்ப் புத்தூர் உறையும் நல்
வேண்டும் வரம் ஈயும் சொர்ணபுரியரொடு சொர்ணம் – யாண்டும்,
இலங்கும் வயல் **பள.செ.** குடும்பத் திருப்பணிகளால்,
விளங்கும் என்றுமவர் தம்பேர் இயம்பிடுமே...

வசனகவிதை

தேவாரம் பெற்ற திருத்தலங்கள் ஐந்தில் திருப்பணிகள் செய்து வைத்தவர்கள் இவ்வூர் **ராம.மெ.சித. குடும்பத்தாராம்.**

1. **அன்னியூரில்** - அகன்புரிஸ்வரர் கோவில் (கும்பகோணம் திருவீழிமிழலை அருகில்)

2. **வெண்ணி** - கரும்பேஸ்வரர் கோவில். (கும்பகோணம் அருகில்)

3. **திருக்கோலக்கா** - தானபுரீஸ்வரர் ஓசை நாயகி கோவில் (சீர்காழி அருகில்)

4. **கீழையூர்** - வீரட்டானேஸ்வரர் சிவானந்தவல்லி கோவில் (விழுப்புரம் அருகில்)

5. **திருமருகல்** - இரத்தினபுரீஸ்வரர் வண்குவார்குழலி என்னும் அமோதாளக நாயகி கோவில் (நன்னிலம் அருகில்)

அறுபடை வீட்டில் மூன்றாம் படை வீடாம் பழநீயம்பதியில், மலைமேல், தங்களுக்குச் சொந்தமான இடத்தில் தண்ணீர்பந்தல் தர்மம் கண்டவர்கள் **ராம.ம.மெ.சித. குடும்பத்தார்.**

பொதுவுரை

இம்பெரும் புதூரின் அருமை
பெருமைகளை எமக்கு தொகுத்தும்
நற்பெரும் உதவிதனை தன்
மனதாரத் தந்துதவிய இவ்வூர்,
ஒப்பிலா உயர் செல்வர் திரு. **மா. அரு.**

சோமசுந்தரப் பெருந்தகையின்
நற்குண நயத்துக்கு நன்றி யாண்டு முடையோம் யாம்...

தேவகோட்டையின் பெருமைகள்

நுட்பர் வல்லவர் இவண்யாவரும்
நுண்ணறவினரானதனால்
திட்பம் செய்யுநர் திருப்பணிபல
தினமும் பேணி மேவலால்,
சட்டம் புரிந்தவர் மிகர்
ஆங்கிலச் சட்டமன்ற நிறுவலால்,
எட்பூ நாசி எழில் சால் மாதர்கள் மாண்புற
இவண் மிகச் சார்வதனால்...
திட்டந் தெரிநல் செலவினராதலால்
திருப்பணிகள் நிறைய ஆற்றுகிறார்
செட்டித்தலைமையில் சிறந்தனர்
சீர் நிறை மாட்சி நேர்மையதால்
சிட்டராயினர் பலர் இவண் சீர்பெரும் நெறி
சிவன்மை நேயத்தால்
கொட்டி நல்கினர் உழன்றுழைத்த பணத்தையே.
கோடிகள் எனப் பலவாறாய்.

கடல் கடந்தனர் பலர் வணிகம் மேவலால்
உடல் உழைத்தனர் ஊக்க மேன்மையால்
மடல் விரித்த தாழை மடலின் மணமென
புகழ் கொழித்தனர் புரிந்த பான்மையால்.

நிதி செழித்தனர் நிறுவகத்திறனதால்
பதி சிறத்தனர் பான்மை சால் மாதரார்,
அதி பெருத்தனர் அறிவின் சால்பினால்
விதி வகுத்தனர் நகரர் வாழ்வு உயரவே!

சீர்மிகு தமிழால் தரம் நிறைப் பாவால் நமதூரை நயம்பட படைத்திட்ட பெரியவர் கண்டனூர் **ரகு காசி விஸ்வநாதன்** அவர்களின் அறிமுகக் குறிப்பு–

எனது ஊர் கண்டனூர். எனது குடும்பப்பெயர் கு.தெ.கா.வீர. வீடு. தகப்பனார் 1941 ல் B.A., பட்டதாரி, மதுரை வங்கியில் 1941ல் மதுரை வங்கி, எழுத்தராகச் சேர்ந்து, முதனிலை அலுவலராகப் பணி ஓய்வு பெற்றவர்.

தாயார் தெய்வானை ஆச்சி காரைக்குடி பெண்கள் பள்ளியில் 10 ஆம் வகுப்பு வரை பயின்றவர். கண்டிப்பானவர், துணிவினர். நேரியர்.

தவறெனில் யாரினும் தட்டிக் கேட்கும் தகவுடையவர். செல்வநிலையில் பிறந்து புகுந்த வீட்டுப் பெருமைகளைத் காத்தவர். எம்கூடப் பிறந்த ஆச்சிகள் இருவர்.

தம்பி படித்து வருவாய் வரித்துறையில் 36 ஆண்டுகள் பணியினன். நான் 1970ல் B.Sc., முடித்து, மாபெரும் மதிப்புடை மதுரை வங்கியில் 33 ஆண்டுகாலம் பணிக்குப் பின் விருப்ப ஓய்வினன். ஆறாம் வகுப்பில் திருச்சி தேசிய உயர்நிலைப்பள்ளியில் சிறப்புத் தமிழ் பயின்றவன். பாப்புனைவில் ஒரு சிறந்த மகிழ்வு. எங்களூர் சிறப்புகளை எங்களூர் சிவன் கோயில் குடமுழுக்கு மலரில் எமதூரின் பெருமைகளை பத்துப் பாடல்களின் பரவியவன்.

ஏதாவது ஒரு நல்ல பணி ஆற்ற விழைவை தேவகோட்டை **சோமசுந்தரம் அருணாசலம்** அவர்களிடம் திரு. வெளியிட்டமைக்கு, அவர் தனவந்தர்களின் பெரும்பேரூர் எமது தேவகோட்டை ஊரின் சிறப்புகளைப் பாடலாமே எனக்கூற அவர்கள் தந்த குறிப்புகளின் அடிப்படை கொண்டு தேவகோட்டை சிறப்புக்களை பாடல்களாய் புகழலுற்றேன்.

தேவகோட்டை பல்லாற்றானும், அருமை பெருமைகளையும், அதில் உறையும். நகரத்தார் சிறப்புகளையும் சிறப்புச் செய்துள்ளேன். அதிற் நயங்கள், நலங்களை அடுத்தவர் தமக்கு இயம்புங்கள். குற்றங்கள் இருப்பின் பொறுத்துக் கொள்ளவும். கம்பன் சொல்வதுபோல் கடல் போலும் பெருமையிற் சிறந்த உங்களூரை எம் சிற்றறிவுக்கு எட்டியவரைச் செழுமை செய்துளேன்.

எனது மாமனார் தெய்வத்திரு. **தேனி உடையப்ப செட்டியார்** அவர்கள் எப்படியும் என் மகளை தேவகோட்டையில் தான் திருமணஞ் செய்ய நிச்சயப்படுத்தி, நிறைவேற்றினோம், நன்றி வணக்கம்....

நன்றி நவிலல்

முகநூல் தந்த நட்பு,
அதில் பதிவிட்ட கவிதை கண்டு ஈர்ப்பு,
தொலைபேசி வழி தொடரும் நல்லார்வம்,
நல்லவர்கள் வாழ் தேவகோட்டை ஊர்,
குறிப்பு வேண்டி கேட்டிட, ஊரின் சிறப்பெல்லாம்
நல் கவிதை வடிவில் தந்த நண்பருக்கு
நன்றிகள் பல, பல கூறி
என் வணக்கத்தையும் உரித்தாக்குகின்றேன்.

அன்புடன்,
மா.அரு. சோமசுந்தரம்
தேவகோட்டை.

சித்தி உபாயம்



ஒற்றியூர்

தெற்று களையவே,
வெற்றி வேண்டுவீர்,
ஒற்றி ஊரன் தாள்
பற்றிக் கொள்ளுவீர்....!

தஞ்சை

பஞ்சம் ஓடவே
தஞ்சம் தேடுவீர்
தஞ்சை யாளரின்
விஞ்சை நீடுமின்....!

திருசிபுரம்

விரசந் தீரவே
சரசம் போகவே
திருசி தாயரின்
பரிசந் தேடுவீர்....!

தில்லை

தொல்லை என்பது
இல்லை ஆகவே,
தில்லை யாடனின்
எல்லை சேர்கவே....!

திருஆனைக்கா

பாரின் மிசைநீர்
தேரின் மிகவேதண்
நீர்காவல் ஆனையின்
சீர்கழல்கள் சேர்மினே....!

மதுரை

புதிர்கொள் வாழ்வினில்
விதிர்கள் ஓயவே
சதிர்கள் ஆடுவார்
பதங்கள் தேடுவீர்....!

மறைக்காடு

அதமம் அகலவே
மதுரங் கொள்ளுவீர்
கதவம் திறல்மினார்
பதங்கள் நீடுவீர்....!

நெல்வேலி

அல்லல் பசியதன்
ஒல்லை தவிரவே
நெல்லின் வேலியன்
நல்ல பான்மையே....!

இராமேச்சுரம்

அமைதி கடற்கரை
இயைந்த சீதையள்
சமைத்த சோதியை
உம்மில் கொள்ளுமே....!

கயிலை

இமய வரை மலர்
உமையள் வழிபடு
மயிலை நாதனின்
கயிலை தானரோ!....

திருவான்மியூர்

ஆன்ம நன்னிலை
வேண்டி விழைவீர்காள்
வான்மியூர் உறைவனை
ஊனுள் இருத்துவீர்....!



தேவகோட்டையின் சிறப்பு வாய்ந்த இரத்தினவேல்

தேவகோட்டை சிறப்புமலர்



திரு. மா.அரு. சோமசுந்தரம்
தேவகோட்டை



திரு. ரகு காசி விஸ்வநாதன்
கண்டனூர்